Form No.53
(See Rule 43)
DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**
**CC.No.39/2023**

**2025-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதி வியாழக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 15 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 15 | தொழில் | - | மருத்துவர் |
| பெயர் | - | திரு.சதீஷ்குமார் | வட்டம் | - | வண்டலூர் |
| த/பெ | - | திரு.ராஜேந்திரன் | சமயம் | - | |
| கிராமம் | - | SRM Global Hospital | வயது | - | 33/2025 |
| சாதி | - | | | | |

| | |
|---|---|
| நாள் ( Dated) : 21-08-2025 | |
| **நீதிமன்ற புள்ளி ( IN COURT POINT)** | |
| இடம் ( Venue) | - நீதிமன்ற காணொலி அறை. வால்பாறை |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | - தலைமை எழுத்தர், மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், வால்பாறை |
| இந்த வழக்கில் வழக்கறிஞர் | அரசுக்காக – S.P.ராமச்சந்திரன் LLM.APP Gr-1 |
| | எதிரிக்காக வழக்கறிஞர் திரு.R.R.பெருமாள், B.A.,B.L., |
| **தொலைதூர புள்ளி (IN REMOTE PONIT)** | |
| இடம் ( Venue) | மாவட்ட நீதிமன்றம் செங்கல்பட்டு |
| ஒருங்கிணைப்பாளர் ( Co-Ordinator) | திரு.S.கண்ணன், System Analyst |
| சாட்சி ( Witness) | திரு.சதீஷ்குமார் (அ.சா. 15) |

மாவட்ட நீதிமன்றம் செங்கல்பட்டு நீதிமன்ற காணொலி அறைக்கு வரவழைக்கப்பட்டு நீதிமன்ற காணொலி சாதனம் மூலம் விசாரணை செய்யப்படுகிறது.

**<u>21-08-2025</u>**
**( எதிரி ஆஜர்)**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது சென்னை SRM Global Hospital -ல் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 20-01-2023-ம் தேதி நான் வால்பாறை அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது வால்பாறை காவல் நிலைய குற்ற எண் 10/2023, ச/பி. 279, 337, 304(A) இதசா என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட சுமார் 21 வயதுடைய மகேஷ் என்கிற ஒரு ஆணின் பிரேதத்தை பிரேத

பரிசோதனை செய்யவேண்டி வால்பாறை காவல் ஆய்வாளரின் விண்ணப்பத்தை காவலர் 820 திரு.சதீஸ்குமார் என்பவரிடம் இருந்து பெறப்பட்டது. மேற்படி பிரேதத்தை பிரேத வழிக்காவலர் அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை அன்று பகல் 12.30 மணியளவில் தொடங்கி மதியம் 01.30 மணியளவில் முடித்தேன்.
பிரேதத்தில் உடல் முழுவதும் பிணவிரைப்பு தன்மை காணப்பட்டது. ஆண் பிரேதம் திடகாத்திரமாக இருந்தது. வாய் மூடிய நிலையில் இருந்தது. வாய்க்குள் நாக்கு இருந்தது. காதிலும், மூக்கிலும் ரத்தக் கசிவு காணப்படவில்லை. கண்கள் மூடிய நிலையில் இருந்தது. வெளிப்புற ஆண்உறுப்பில் சிராய்ப்பு காயங்கள் காணப்பட்டது.

**வெளிப்புற காயங்கள்**

1. 5X2 செ.மீ,அளவிலான சிராய்ப்பு காயம் வலது புற கண்ணுக்குகீழ் காணப்பட்டது.
2. 1X1 செ.மீ,அளவிலான சிராய்ப்பு காயம் மேல் உதட்டில் காணப்பட்டது.
3.3X1 செ.மீ,அளவிலான சிராய்ப்பு காயம் வலது தாடையிலும், 1X1 செ.மீ அளவிலான சிராய்ப்பு காயம் தாடையின் கீழ் பகுதியில் காணப்பட்டது.
4.15X6 செ.மீ,அளவிலான சிராய்ப்பு காயம் இடது கை முன்னங்கையிலும், மணிகட்டில் பின்புறத்திலும் காணப்பட்டது.
5.10X5 செ.மீ,அளவிலான சிராய்ப்பு காயம் இடது கீழ் இடுப்பு பகுதியில் காணப்பட்டது.
6.15X3 செ.மீ,அளவிலான சிராய்ப்பு காயம் இடது காலில் காணப்பட்டது.
7.6X3 செ.மீ,அளவிலான சிராய்ப்பு காயம் வலது இடுப்பில் காணப்பட்டது.
8.3X3 செ.மீ,அளவிலான சிராய்ப்பு காயம் வலது இடுப்பு பக்கவாட்டில் காணப்பட்டது.
9.8X5 செ.மீ,அளவிலான சிராய்ப்பு காயம் வலது புட்டத்தில் காணப்பட்டது.
10. வலது முன்னங்கை பின்பக்கத்தில் பலதரப்பட்ட சிராய்ப்பு காயம் காணப்பட்டது

**உட் புறகாயங்கள்**

1. வயிற்றின் உட்பகுதியில் சுமார் 2 லிட்டர் ரத்தம் தேங்கி இருந்தது.
2. வலது சிறுநீரகத்தில் மேற்பகுதியில் காயம் ஏற்பட்டு ரத்தம் உறைந்த நிலையில் இருந்தது.
3. வலது நுரையீரலில் கீழ் பகுதியில் ரத்தம் உறைந்த நிலையில் காணப்பட்டது.
4. இடது 3, 4 விலா எலும்புகள் உடைந்து காணப்பட்டது.
5. வலது 7,8,9 விலா எலும்புகள் முறிந்து வலது நுரையீரலில் கீழ் பகுதியில் குத்தி ரத்தக்கசிவுடன் காணப்பட்டது.

**கருத்துரை**

உள்உறுப்பு காயங்களினால் ஏற்பட்ட அதீத ரத்தப்போக்கின் காரணமாகவும் அதனால் ஏற்பட்ட அதிர்ச்சியின் காரணமாகவும் மேற்குறிய நபர் இறந்திருக்ககூடும் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

இறந்த நபரை நான் பிணக்கூராய்வு செய்வதற்கு முன்பாக அவர்குரிய விபத்து பதிவேட்டை பார்வையிட்டேன் என்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் மது வாடை இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பிணக்கூராய்வில் அவ்வாறான அறிகுறி எதுவும் இல்லை. அவர் நான்பிணக்கூராய்வு செய்வதற்கு எவ்வளவு நேரத்திற்கு முன்பு இறப்பு ஏற்பட்டிருக்ககூடும் என்றால் விரைப்பு தன்மை காணப்பட்டதால் 6 முதல் 8 மணி நேரத்திற்கு முன்பாக

இறந்திருக்ககூடும். ஒரு நபர் பிணக்கூராய்வு செய்வதற்கு 8 மணி நேரத்திற்கு முன்பாக மது அருந்தியிருந்தால் மது அருந்தியதற்கான அறிகுறியை பிணக்கூராய்வில் கண்டறியமுடியாது என்றால் சரிதான். மது போதையில் இருக்கும் நபர் ஓடுகின்ற வாகனத்தில் இருந்து கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை** இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்) திருமதி. N.மீனாட்சி,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.